# அரச அச்சிடல் கூட்டுத்தாபனம்

# பதவி வெற்றிடம்

வர்த்தக ரீதியிலான அச்சிடல், பாதுகாப்பு அச்சிடல் பிரசுரித்தல் மற்றும் காகிதாதி உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள சிறப்பாக தாபிக்கப்பட்ட இலாபமீட்டும் வர்த்தக ரீதியிலான நிறுவனமே அரச அச்சிடல் கூட்டுத்தாபனமாகும் என்பதுடன் இந்நிறுவனமானது பின்வரும் பதவி வெற்றிடத்திற்கு சுறுசுறுப்புள்ள மற்றும் விளைபலன் தரவல்ல மற்றும் முன்னைய பணி அனுபவமுள்ள இலங்கை பிரஜையொருவரை அழைக்கின்றது.

## முகாமையாளர் பதவி (சந்தைப்படுத்தல்)

**நன்மை பயக்கும் தொழிற்பணி:**

விற்பனைகூடங்களின் சந்தைப்படுத்தல் பிரிவின் அனைத்து முகாமைத்துவ செயற்பாடுகளுக்கும் பொறுப்பாகவிருப்பதுடன் செயற்பாடுகளின் அனைத்தையுமடக்கிய மேற்பார்வையை செயற்படுத்தல். கூட்டுத்தாபனத்தின் உற்பத்தியின் விற்பனையை அபிவிருத்தி செய்வதற்காக செயல்வலுவுள்ள மற்றும் வினைத்திறனுடனான சந்தைப்படுத்தல் திறமுறைகளை அமுல்நடாத்தல்.

**தகைமை:**

**கல்விசார் (வெளியக)**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட இளமாணிப்பட்டமொன்று (சந்தைப்படுத்தல் மற்றும் வணிக நிர்வாகம் விரும்பத்தக்கது) அத்துடன் பட்டப்படிப்பின்படிப்பு பட்ட (முதுமாணி)தகைமை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றின் இணை அங்கத்துவத்துடன் இயைபுள்ள துறையில் அரசாங்க திணைக்களம்/கூட்டுத்தாபனம் அல்லது புகழ்வாய்ந்த வணிக நிறுவனமொன்றில் பதினைந்து (15) வருட அனுபவம்.

**(உள்ளக)**

இயைபுள்ள துறையில் முகாமைத்துவ வகுதியின் i ஆம் தரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்தவர்களும் இப்பதவிக்கு உரித்தாவர்.

**ஏனைய தேவைப்படுத்தல்கள்:**

- விற்பனை செய்தல் மற்றும் பேச்சுவார்த்தை திறனில் சிறந்த புலமை.
- பலமான தலைமைத்துவ திறன்கள்
- மிகச்சிறந்த தொடர்பாடல் திறன்கள்
- மிகவும் ஒழுங்கமைக்கப்பட்டது
- நெறிமுறையுடன் வலுவானது
- சிறந்த சமூகரீதியான திறன்கள்
- விபரங்களுக்கான மிகநுட்பமான கவனத்தைச் செலுத்துதல்
- கணனி அறிவு
- செயற்றுணிவுத் தன்மை
- சிறந்த அணித்தலைவர், சிக்கல்களை தீர்ப்பவர் மற்றும் சுயமாக சிந்திக்கக்கூடிய ஆளுமையுடையவர் மற்றும் விற்பனை இலக்குகளை /வெற்றிகளை பூர்த்தி செய்பவர் ஆகியவற்றை கட்டாயமாக கொண்டிருத்தல் வேண்டும்.
- எந்த நேரத்திலும் நாடளாவியரீதியில் பயணிக்கக்கூடிய நிலைமையிலிருத்தல்
- கொழும்பு மற்றும் புறநகர் பகுதியில் வசிப்பது மிகவும் விரும்பத்தக்கது.

**சம்பள மட்டம்:**

ஏச்எம் 1-1- மாதாந்தம் 80,295 15 x 2,270-114,345 ரூபா

**வயதெல்லை:**

வயதானது 35 இற்கு குறையாமலும் 55 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பிரயோகப்படுத்தப்படமாட்டாது.

**ஏனைய அனுகூலங்கள்:**

PED 1/2015(ii) என்ற சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகபூர்வ குழும போக்குவரத்து வசதிகள் அல்லது சொந்த வாகனமாயின் அதற்கான படி மற்றும் எரிபொருள் வழங்கல்.

| | |
|---|---|
| போக்குவரத்து படி | 50,000 ரூபா |
| மாதாந்த எரிபொருள் எல்லை | 115 லீட்டர்கள் |

ஆட்சேர்ப்பு முறை: கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையொன்றின் மூலமாக

**சேவை நிபந்தனை:**

மேலேயுள்ள பதவியானது நிரந்தரமானதும் 3 வருட தகுதிகாண் காலத்தையும் கொண்டது. உள்ளகத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டவர்கள் ஒரு (01) வருட பதில் கடமையாற்றும் காலத்திற்கு உட்படுத்தப்படுவார்கள்.

**சம்பளத்திற்கு மேலதிகமாக பின்வரும் படிகளும் வழங்கப்படும்.**

❖ அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட படிகள்.

- தொழில்சார் படி 3,000 ரூபா
- வாழ்க்கைச் செலவு 17,800 ரூபா
- ஏனைய படிகள் 5,000 ரூபா
- தொலைபேசி படி 3,750 ரூபா

❖ வருகைக்கான ஊக்குவிப்பு

❖ உணவு படி

**மேலதிக அனுகூலங்கள்:**

○ ஊழியர் மற்றும் குடும்பத்தினருக்குமான மருத்துவ திட்டம்
○ வருடாந்த மிகையூதியம்
○ ஊசேநி மற்றும் ஊநநி
○ பாவிக்கப்படாத விடுமுறைக்கான மீள்பண செலுத்துகை

**விண்ணப்பிக்கும் முறை:**

2024.08.01 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்கள் அத்துடன் கல்விசார் மற்றும் தொழில்சார் சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் இரு உறவினரல்லாத பரிந்துரையாளர்களின் தொலைபேசி இலக்கங்கள் ஆகியன அடங்கலான முழுமையான சுயதரவிலான விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் இயைபுள்ள திணைக்களங்களின் தலைமையூடாகவே அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியானது குறிப்பிடப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**அரச அச்சிடல் கூட்டுத்தாபனம்,**
**பனாலுவ,**
**பாதுக்க.**

SPC